நகராட்சி அலுவலகம்
பொன்னேரி .

கூட்டம் எண். 03 / 2024 நாள்: 27.08.2024

## சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் **2024** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **30.08.2024** வெள்ளிக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**பொன்னேரி நகராட்சி**

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

### பொருள் எண் 1

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஜூலை **2024** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்: 506 நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** ஆணையர் அவர்களின் July 2024 - மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் – மன்றம் பதிவு செய்கிறது.

### பொருள் எண் 2

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் ஜூலை **2024** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்: 507 நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** பொறியாளர் அவர்களின் July 2024 - மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் – பதிவு செய்கிறது.

### பொருள் எண் 3

பொன்னேரி நகராட்சி பெரியக்காவணம் பகுதியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை பாதுகாப்பான முறையில் இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் |
|---|---|---|
| 1 | 3 | பொன்னேரி நகராட்சி பெரிய காவனம் பகுதியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை பாதுகாப்பான முறையில் தரை மட்ட அளவில் இடித்து அப்புறப்படுத்தி தருதல் பணி |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

   (ந.க.எண் 1049/2023/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 508** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** Periyakavanam – பகுதியில் 2 L –Litre கொள்ளளவு கொண்ட OHT மிகவும் Demage அடைந்துள்ளதால் – பாதுகாப்பான முறையில் இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

பணியின் அவசியம் கருதி – நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## <u>பொருள் எண் 4</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியகாவணம் பகுதியில் 2இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பழுதடைந்த மேல் நிலை நீர்த்தேக்க தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த இவ்வலுவலக ஏல விளம்பரம் ந.க.எண் : 1049/2023/இ1 நாள் : 09-07-2024 –ன்படி 23-07-2024 அன்று கோரப்பட்ட ஏலத்தில் திரு. S.A. மணிராஜ் என்பவருக்கு ரூ. 47000/- க்கு உச்சபட்ச தொகையாக கோரியுள்ளதால் அன்னாருக்கு பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதிக்கு

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க. எ.ண் 1049/2023/ இ 1)

**நகர்மன்ற தீர்மான எண்: 509** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் : Periyakavanam –** பகுதியில் உள்ள OHT- அப்புறப்படுத்த இவ்வலுவலக ஏல விளம்பரம் 23.07.2024 அன்று கோரப்பட்ட ஏலத்தில் திரு, . S.A.ManiRaj – என்பவருக்கு ரூ.47000/- க்கு உச்சபட்ச தொகையாக கோரியுள்ளதால் – பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதிக்கு – 1 மன்றம் அனுமதி வழங்குகிறது. பணியின் அவசியம் கருதி நகா மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 5

பொன்னேரி நகராட்சி பொறியாளரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN18BQ2035 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.11,856/- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஈப்புவாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க. எ.ண் 659/2021/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 510 நாள்: 30.08.2024**

**தீர்மானம் : நகராட்சி Engineer-ன் பயன்பாட்டில் உள்ள** BOLERO VEHICLE TN18BQ2035 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.11,856/- வழங்க M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை – பட்டியல் – வரப்பெற்றுள்ளதை – மன்ற பார்வைக்கு செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள – மன்றம் அனுமதி வழங்குகிறது. நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 6

பொன்னேரி நகராட்சி, நகர் மன்றத்தலைவர் அலுவலக பயன்பாட்டில் உள்ள SCORPIO வாகனம் TN 18 BM 5937 – ற்கு காப்பீடு முடியும் தருவாயில் உள்ளதால், Insurance Premium புதுப்பித்து கொள்ள ரூ. 58,422/- காசோலை வழங்குமாறு United India Insurance நிறுவனம் மூலமாக Invoice பட்டியல் வரப்பெற்றுள்ளதை, மன்ற பார்வைக்கும், மேற்கண்ட நிறுவனத்திற்கு காப்பீடு தொகையை வழங்க நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்புவாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

   (ந.க. எ.ண் 659/2021/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 511 நாள்: 30.08.2024**

**தீர்மானம் : Chairman – அவர்களின் பயன்பாட்டில் உள்ள** SCORPIO வாகனம் TN 18 BM 5937–ற்கு – Insurance Premium புதுப்பித்து கொள்ள ரூ. 58,422/- காசோலை வழங்குமாறு United India Insurance – நிறுவனத்திடமிருந்து காப்பீட்டு தொகையை வழங்க நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது. நகர்மன்ற தலைவர் – முனு அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 7

பொன்னேரி நகராட்சி நகர் மன்றத் தலைவர் அலுவலக பயன்பாட்டில் உள்ள SCORPIO வாகனம் TN18 BM 5937 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.9,112/- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலமாக பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்புவாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க. எ.ண் 659/2021/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 512 நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** நகர் மன்றத் தலைவர் – பயன்பாட்டில் உள்ள SCORPIO வாகனம் – TN18 BM 5937 - தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.9,112/- தொகை வழங்கியது. M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை Chennai - பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், செலவினம் நகராட்சி – பொதுநிதியிலிருந்து – செலவிட – மன்றம் அனுமதி வழங்குகிறது நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 8

இந்நகராட்சியில் வார்டு எண் 3 நெல்லூர் அம்மன் கோயில் அருகிலுள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு புதிய செப்டிக் டேங்க் கட்டுதல், வார்டு எண் 11 தாயுமான் 1வது தெரு, தாயுமான் 1வது குறுக்கு தெரு மற்றும் தாயுமான் 2வது தெருவில் குடிநீர் குழாய் புதைத்தல் , வார்டு எண் 25 ல் வள்ளலார் 2வது தெரு, 3வதுதெரு 4வது தெரு மற்றும் 5வது தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண் 11, 17 ஆகியவற்றில் ராம் நகர், பாலன் நகர் மற்றும் சக்தி நகர் பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் குடிநீர் வால்வுகள் அமைக்கும் பணி இவற்றிற்கு பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் அடிப்படையில் 4 பணிகளுக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ( ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 3 | நெல்லூர் அம்மன் கோயில் அருகிலுள்ள சமுதாய கழிப்பிடத்திற்கு புதிய செப்டிக் டேங்க் கட்டுதல் | 2.70 |
| 2 | 11 | தாயுமான் 1வது தெரு , தாயுமான் 1வது குறுக்கு தெரு மற்றும் தாயுமான் 2வது தெருவில் குடிநீர் குழாய் | 2.50 |

| | | | |
|---|---|---|---|
| | | புதைத்தல் | |
| 3 | 25 | வள்ளலார் 2வது தெரு, 3வதுதெரு 4வது தெரு மற்றும் 5வது தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 17.30 |
| 4 | 11 , 17 | ராம் நகர், பாலன் நகர் மற்றும் சக்தி நகர் பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் குடிநீர் வால்வுகள் அமைக்கும் பணி | 1.00 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணிகளின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 104 /2023/ இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 513** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் : Wd 3,11,17 & 25** ஆகியவற்றில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் குடிநீர் வால்வுகள் அமைக்கும் பணியாக 4 பணிகளுக்கு, நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்ற அனுமதிக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 9

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2024-25 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 104 /2023 / இ1 நாள் 09.07.2024 ன்படி 25.07.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண் 15 பஜனை கோயில் தெருவில் உள்ள மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களை உயர்த்துதல் | 0.70 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 2 | வார்டு எண் 15 வரதப்பன் தெருவில் உள்ள மழைநீர் கால்வாயினை சீரமைத்தல் | 4.90 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 3 | வார்டு எண் 11 தேரடி 3வது குறுக்கு தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.50 | திரு.எஸ். பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| | | | M/s Land Star Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 5.16% அதிகம் |
| 4 | வார்டு எண் 11 தாயுமான் 1வது தெரு மற்றும் 1வது குறுக்கு தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 15.50 | திரு.உ.சலீம் ஒப்பந்ததாரர் | - |
| | | | திரு.ஆர். பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | M/s Land Star Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% அதிகம் |
| 5 | வார்டு எண் 11 தாயுமான் 2வது தெரு மற்றும் 3வது குறுக்கு தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.60 | திரு.உ.சலீம் ஒப்பந்ததாரர் | - |
| | | | திரு.ஆர். பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| | | | M/s Land Star Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 5.14% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி பணிகளில் வரிசை எண் 1 மற்றும் 2 ற்கு ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.
2. வரிசை எண் 4 மற்றும் 5 ற்கு மூன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதில் திரு.உ.சலீம் ஒப்பந்ததாரர் என்பவர் இரு பணிகளுக்கும் வைப்புத்தொகை செலுத்தாததால் அவரது ஒப்பந்தபுள்ளியினை நிராகரிக்கலாம் .
3. வரிசை எண் 3, 4 மற்றும் 5 ஆகிய பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

( ந.க.எண் 104/2023 /இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 514 நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** பொதுநிதி 2024-25 ன்கீழ் பணி மேற்கொள்ள – 25.07.2024 பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் –

1. வரிசை எண்1 & 2 –ற்கு – ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை.

2. வரிசை எண். 4 & 5 - மூன்று ஒப்பநத புள்ளிகளுக்கு திரு.உ.சலீம் ஒப்பந்ததாரர். இரு பணிகளுக்கு வைப்புத்தொகை செலுத்தாததால் அவரது ஒப்பந்தபுள்ளியினை நிராகரிக்க மன்றம் அனுமதிக்கிறது.

3. வரிசை எண் 3,4,5 ஆகிய பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 10</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2024-25 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 104 /2023 / இ1 நாள் 05.07.2024 ன்படி 25.07.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண் 3 நெல்லூர் அம்மன் கோயில் அருகிலுள்ள சமுதாய | 2.70 | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கழிப்பிடத்திற்கு புதிய செப்டிக் டேங்க் கட்டுதல் | | திரு.எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.38 % அதிகம் |
| 2 | வார்டு எண் 11 தாயுமான் 1வது தெரு , தாயுமான் 1வது குறுக்கு தெரு மற்றும் தாயுமான் 2வது தெருவில் குடிநீர் குழாய் புதைத்தல் | 2.50 | திரு.எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.39 % குறைவு |
| | | | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.70 % அதிகம் |
| 3 | வார்டு எண் 25 வள்ளலார் 2வது தெரு, 3வதுதெரு 4வது தெரு மற்றும் 5வது தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 17.30 | திரு.உ.சலீம் ஒப்பந்ததாரர் | - |
| | | | திரு.ஆர். பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| | | | M/s Land Star Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 4.87% அதிகம் |
| 4 | வார்டு எண் 11 ராம் நகர், பாலன் நகர் மற்றும் சக்தி நகர் பகுதியில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் குடிநீர் வால்வுகள் அமைக்கும் பணி | 1.00 | திரு.எல்.ஜி.அரசு ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.52% குறைவு |
| | | | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.69% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.
2. வரிசை எண் 3-ற்கு மூன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதில் திரு. உ. சலீம் ஒப்பந்ததாரர் என்பவர் வைப்புத்தொகை செலுத்தாததால் அவரது ஒப்பந்தபுள்ளியினை நிராகரிக்கலாம் .
   ( ந.க.எண் 104/2023 /இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 515 நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** பொதுநிதி 2024-25 ன்கீழ் 25.07.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் –

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் வரி எண். 1. Sri Thirumuruga construction – வரிசை எண். 2 – திரு L.G Arasu – வரிசை எண். 3 திரு. R. Prakash - வரிசை எண் 4– திரு. L.G Arasu – ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கிறது. வரிசை எண் 3–ற்கு மூன்று ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதில் திரு.உ.சலீம் வைப்புத்தொகை செலுத்தாததால் அவரது ஒப்பந்தபுள்ளியினை நிராகரிக்கிறது மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 11

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2024-25 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண். 104 /2023 / இ1 நாள் **10.07.2024** ன்படி **25.07.2024** அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண் 14 நீலி அப்பாதுரை விரிவாக்கம் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 12.40 | M/s Land Star Infra Tech ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03 % குறைவு |
| | | | M/s OS & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 4.13 % அதிகம் |
| 2 | இரயில்வே நிலைய சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் புதிய தேரடி தெரு ஆகிய சாலைகளில் உள்ளமழைநீர் வடிகால்வாய்க்கு Slit Catch Pit அமைத்தல் | 12.50 | M/s ஜீவா என்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு |
| | | | திரு.ஜி.விஜயகுமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.31 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

( ந.க.எண் 104/2023 /இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 516 நாள்: 30.08.2024**

தீர்மானம் : பொதுநிதி **2024–2025**ன் கீழ் பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் dated 25.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். **S.No.1 – wd 14** M/s Land Star Infra Tech, S.No. 2, Railway Salai, Thiruvottriyur Highway – New Car St – slit Catch Pit – M/s Jeeva Enterprises மன்றம் அனுமதி அளிக்கிறது. குறைந்த ஒப்பந்தபுள்ளிகளை மன்றம் ஏற்கிறது.

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25** ன்கீழ் கீழ்க்கண்ட பணிக்கு மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 2001 /2024/அ10 நாள் **01.08.2024** ன்படி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியதின்பேரில் பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 776/2024/இ1 நாள் **02.08.2024** ன்படி **16.08.2024** அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி சதவிகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண் 11 ராம்நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, அப்துல் அஜீஸ் தெரு, தாயுமான் 4வது தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல்</td><td rowspan="2">20.00</td><td>திரு.வி.குமார் ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.03 % குறைவு</td></tr>
<tr><td>திரு. பி.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.11 % அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.
   ( ந.க.எண் 776/2024 /இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 517 நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024 – 2025ன் கீழ் 16.08.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு மன்றம் பதிவு செய்கிறது. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி மன்றம் பார்வைக்கும் பதிவிற்கும்.

## <u>பொருள் எண் 13</u>

பொன்னேரி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெறவும், குப்பைகள் தேங்காமல் தினந்தோறும் அப்புறப்படுத்தவும் இந்நகராட்சிக்கு தூய்மைப் பணியாளர்களை வெளிக் கொணர்வு முறையில் மன்ற தீர்மான எண் 216 நாள் 28.04.2023ன்படி M/s. MVK Murugan நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அதற்கான ஒப்பந்த பணிக்காலம் 30.04.2024ல் முடிவடைந்த நிலையில் தற்போது 2024 நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் புதியதாக ஒப்பந்தபுள்ளி கோர இயலாத நிலை உள்ளது.

எனவே திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி நடைபெற தற்போது மேற்படி பணியை மேற்கொள்ளும் M/s. MVK Murugan நிறுவனத்திற்கு மே 2024 முதல் ஜுலை 2024 வரை 3 மாதங்களுக்கு ஒப்பந்தத்தினை அதே விலை விகிதத்தில் நீட்டிப்பு செய்திடவும், பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டமைக்கு நகர்மன்ற தலைவரின் பின்னேற்பு பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொது சுகாதாரம் நலன்கருதி பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம்
2. செலவினத்தினை Single Nodal Account -லிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
   ( ந.க.எண் 727/2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 518 நாள்: 30.08.2024

தீர்மானம் : திடக்கழிவு பணிகள் நடைபெற M/s MVK murugan நிறுவனத்திற்கு May 2024 to July 2024 வரை ஒப்பந்தத்தினை அதே விலை விகிதத்தில் நீட்டிப்பு செய்திட, தலைவரின் பின்னேற்பு பெற மன்றம் பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கிறது. செலவினத்தினை Single Nodal Account –லிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள் எண் 14</u>**

உள்ளாட்சி நிதித்தணிக்கை சட்டம் 2014 பிரிவு எண் 7(1) ன் படி உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டு கணக்குகள் நிதியாண்டு முடிவடையும் மூன்று மாதத்திற்குள் தணிக்கைக்காக நிர்வாக அதிகாரியால் தயாரித்து அனுப்பப்பட வேண்டும் எனவும் பொன்னேரி நகராட்சியின் 2023-24 ஆம் ஆண்டு கணக்குகளை 15.07.2024க்குள் அனுப்பி வைத்திட உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

2023-24ம் ஆண்டு தணிக்கைக்கு Journal Book, General Ledger, Trial Balance, Balance sheet, போன்ற கணக்குகள் தயாரிக்க Data Entry செய்யும் பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படியான விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர்கள் விவரம் | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | RMS Account Consultant, Chennai | 1,50,000/- |
| 2 | JB Soft System, Chennai | 1,56,500/- |
| 3 | Cursor Solution, Chennai | 1,55,500/- |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த RMS Account Consultant, Chennai நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினம் ரூ 1.50 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க. எண் 658/2022/பி1)

நகர்மன்ற தீர்மான எண்: 519 நாள்: 30.08.2024

**தீர்மானம் : பொன்னேரி நகராட்சியின் 2023 – 2024 ஆம் ஆண்டு, கணக்குகளை மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரியதில் – குறைந்த விலைப்புள்ளி அளித்த** RMS Account Consultant - Chennai நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க செலவினம் ரூ.1.50 L, பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி கோர மன்றம் அனுமதி வழங்குகிறது.

## <u>பொருள் எண் 15</u>

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 12 அரிஅரன் பஜார் தெருவில் உள்ள பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் மற்றும் சாலையோரக்கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் ஆகிய இனங்களின் குத்தகை காலம் 31.03.2024 வரை முடிவுற்றதை தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தால் பொதுஏலம் விட இயலாத நிலையில் நகராட்சி நிர்வாக நலன் கருதி நிதியிழப்பு ஏற்படாமல் இருக்க மேற்கூறிய இரண்டு குத்தகை இனங்களுக்கு நகராட்சி பணியாளர் மூலம் துறை ரீதியாக வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது மேற்படி குத்தகை இனங்களுக்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும், ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும் அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண் 856 /2024/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 520** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** Wd எண். 12 Hariharan தெருவில் பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் மற்றும் சாலையோரக்கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் ஆகிய இனங்களின் குத்தகை காலம் 31.03.2024 வரை முடிவற்றதை தொடர்ந்து, இத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும், நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், செலவினத்தை பொதுநிதியில் மேற் கொள்ளுதல் மன்ற அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## <u>பொருள் எண் 16</u>

சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கூடுதல் கட்டிடத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூடத்திற்கும் மற்றும் நகர்மன்ற தலைவர் அறைக்கும் தேவையான மேஜைகள் மற்றும் நாற்காலிகளை கொள்முதல் செய்ய உத்தேச செலவின தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண். 864 /2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 521** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** 2022 – 2023 திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கூடுதல் கட்டிடத்தில் அமைந்துள்ள Council Hall – ற்கு Chairman Room-ற்கும் தேவையான Table Chair – கொள்முதல் செய்ய தொகை ரூ. 9.50L மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது பணியினை – பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாலாஜி நகர், வள்ளலார் தெரு, டி.எச்.ரோடு மற்றும் மூகாம்பிகை நகர் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் திரவக்குளோரினேஷன் இயந்திரம் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி திரவக்குளோரினேஷன் இயந்திரத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் திரவக்குளோரின் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 864 /2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 522** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** திரவக்குளோரினேஷன் இயந்திரத்திற்கு அவ்வப்போது, தேவைப்படும் திரவக்குளோரின் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 5.00L, மன்றத்தின் அனுமதிக்கு– மன்றம் அனுமதியும், செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 18

இந்நகராட்சியில் புதிய அலுவலக வளாகத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் மண் தரையாக உள்ளதால் மழைக்காலங்களில் சேரும் சகதியுமாக உள்ளதால் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கும், அலுவலக வாகனங்கள் நிறுத்துவதற்கும் சிரமமாக உள்ளதால் அப்பகுதிகளில் பேவர்பிளாக் தளம் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .
   (ந.க.எண். 864 /2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 523** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** புதிய அலுவலக வளாகத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் பேவர்பிளாக் தளம் அமைக்க ரூ. **9.60**L, மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது. பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 19

இந்நகராட்சி அலுவலக கருவூலத்தில் வசூல் செய்யப்படும் தொகையினை இரவு நேரங்களில் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திட பாதுகாப்பு பெட்டகம் ( Safety Locker ) கொள்முதல் செய்யவும், அதற்கான மேடை அமைத்து பொருத்த ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

(ந.க.எண். 864 /2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 524** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** இவ்வலுவலகத்தில் Safety Locker கொள்முதல் செய்யவும், அதற்கான மேடை அமைத்து பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2.50** L /- மன்றத்தில் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது. பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 20

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24–ல் துர்கா நகர் பகுதியில் உள்ள சமுதாய கழிவறை மையபகுதி மேற்கூரை திறந்த வெளியாக உள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் கழிவுகள் புகுந்து மலக்குழி **(Septic tank)** நிரம்பிவருவதால் பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேலும் வார்டு எண். 12 அரிஅரன் பஜாரில் உள்ள பொதுக்கழிப்பிடம் Tiles உடைந்தும் கதவுகள், பேசன்கள் பழுதுபட்டும் உள்ளது, வார்டு எண். 7–ல் உள்ள சமுதாயகழிப்பிடம் கதவு, டைல்ஸ், Wash Basin மற்றும் இதர பழுதுபார்ப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் மதிப்பீட்டு தொகை ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தில் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்ய அனுமதிக்காக.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண். 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 525** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** Wd 24, Wd 12, & Wd 7-ல் உள்ள சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடம் பழுதுபார்ப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் – ரூ.5.00L /- மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி பணி செய்ய அனுமதிக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது. பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 21

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 17404/2022/எம்1, நாள், 29.05.2023 அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கப்படும் திட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் ஆண்டு, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு பள்ளிகளில் 01 முதல் 05 – ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி காலை சிற்றுண்டி வழங்கும் பணியில் 4 உணவு பரிமாறும் பணியாளர்கள் பணிக்கு வருகை புரியாத காரணத்தால் மாணவர்களுக்கு உணவு பரிமாறும் பணியில் தொய்வு ஏற்பட்டதை தொடர்ந்து மேற்படி அரசுப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேறு பணியாளரை நியமனம் செய்ய கடிதம் அளித்ததை தொடர்ந்து கீழ்க்காணும் விவரப்படி புதிய பணியாளர்களை பணி நியமனம் செய்து பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர் மற்றும் முகவரி | அரசுப்பள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | திருமதி. திலகவதி ,<br>எண் 20, ராமசாமி ரெட்டி தெரு<br>திருவாயர்பாடி | மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய<br>நடுநிலைப்பள்ளி, பொன்னேரி<br>வடக்கு பாலாஜி நகர் |
| 2 | திருமதி. எம்.ஜோதி ,<br>எண் 13, ஆண்டவர் தெரு,<br>என்.ஜி.ஒ நகர், பொன்னேரி | ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளி ,<br>டி.எச்.ரோடு, பொன்னேரி |
| 3 | திருமதி. ஏ. ஜெயலட்சுமி ,<br>பெரியதம்பி தெரு<br>சின்னக்காவணம். | மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய<br>நடுநிலைப்பள்ளி, பொன்னேரி<br>வடக்கு சின்னக்காவணம் |

**நகர்மன்ற தீர்மான எண்: 526** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** காலை சிற்றுண்டி வழங்கும் பணியில் – 4 உணவு பரிமாறும் பணியாளர்கள் – பணிக்கு வருகை புரியாத காரணத்தால் – வேறு பணியாளரை நியமனம் செய்து பணி மேற்கொண்டமைக்கு – மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 22

நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்17404/2022/எம்1, நாள். 13.09.2023ன்படி , மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கப்படும் திட்டத்தின் கீழ், 2024–2025 ஆம் ஆண்டு, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு பள்ளிகளில் 01 முதல் 05–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி பரிமாறும் பணியாளர்களுக்கு ஜூன் 2024 முதல் நவம்பர் 2024 வரையிலான 6 மாத காலத்திற்கு மதிப்பூதியமாக ரு. 45,000 /– வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண். 223 /2023/எச்1)

**நகர்மன்ற தீர்மான எண்: 527** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** காலை சிற்றுண்டி பரிமாறும் பணியாளர்களுக்கு June 2024 to Nov 2024 – 6 மாத காலத்திற்கு மதிப்பூதியமாக ரூ. 45000/– வழங்க மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 23

பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொன்னேரி I கிராமம் சர்வே எண்.153/2A2B, 2A2C , 2A2D, 2A2G , 2A2J, 2A2K , 169/2C2, 2C3, 2C5, 2C7 – ல் 9852.00 ச.மீ பரப்பளவு உள்ள நிலத்தினை நகர் ஊரமைப்பு துறை, திருவள்ளூர் அவர்களால் SWP / DTCP / TVLR / Layout No 187/2023 என எண்ணிட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது சாலை 1 முதல் 11 வரை மொத்த விஸ்தரிப்பு பகுதிகள் 816.12 ச.மீ பரப்பு மற்றும் மூலை முடுக்கு 19 Nos – 21.38 ச.மீட்டர், மின்வாரிய துறைக்கு ( Tangedco ) உரிய பகுதி 77.00 ச.மீ ( 0.85%) மற்றும் உள்ளாட்சி துறைக்கு உரிய பகுதி 63.92 ச.மீ (0.71% ) ஆகிய இடங்கள் பொன்னேரி நகராட்சிக்கு பத்திர பதிவு எண் 7135/ 2023 நாள் 31.07.2023-ன்படி தானப்பத்திரமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தானப்பத்திரமாக பெறப்பட்டுள்ள இடங்களில் அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12843/2022/DP-2 நாள் 20.10.2022–ன்படி மேற்படி தானப்பத்திரத்தை ஏற்க பின்னேற்பு ஒப்புதலை பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்
(ந.க.எண் 1073/2023 / F1)

**நகர்மன்ற தீர்மான எண்: 528** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** Survey No. 153/2A2B, 2A2C , 2A2D, 2A2G , 2A2J, 2A2K , 169/2C2, 2C3, 2C5, 2C7 – 9852.00 ச.மீ பரப்பளவு உள்ள நிலத்தினை மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது சாலை 1 முதல் 11 வரை மொத்த விஸ்தரிப்பு பகுதிகள் 816.12 ச.மீ பரப்பு – பத்திர பதிவு எண் 7135/ 2023 - 31.07.2023-ன்படி தானப்பத்திரமாக ஏற்க பின்னேற்பு ஒப்புதலை பெற மன்றத்தின் அனுமதிக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 24

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி கணினி வசூல் மையத்தில் வரிவசூல் பணி மேற்கொள்ளவும், பிறப்பு இறப்பு பதிவு செய்தல், பிறப்பு இறப்பு சான்றுகளை கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்தல் பணிக்காக நான்கு கணிணி இயக்குபவர்கள், நான்கு வாம்பே கழிவறை பராமரிப்பவர், நான்கு பம்பு ஆப்ரேட்டர் மற்றும் ஒரு இரவு காவலர் ஆகியோரை அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும் ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், நகர்மன்ற தீர்மானம் எண் 465, நாள் 08.07.2024–ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டு அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பணியாளர்களை 01.08.2024 முதல் 30.09.2024 வரை இரு மாதங்களுக்கு பணி செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 678/2021/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 529** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்களை 01.08.2024 to 30.09.2024 வரை பணி செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டு – மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## பொருள் எண் 25

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 67 எண்ணிக்கையிலான ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் விநியோகக்குழாய்கள் மூலமாகவும், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலானதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிப்பு ஏற்படுவதால் புதியதாக 07 எண்ணிக்கை 7.5 எச்.பி

திறன்கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார்கள் , பேனல்போர்டுகள் மற்றும் உதிரிபாகங்கள் சப்ளை செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 864 /2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 530** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** 67 எண்ணிக்கையிலான Borewell – களில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிப்பு ஏற்படுவதால் புதியதாக 07 Nos 7.5 H B – திறன் கொண்ட – நீர்மூழ்கி மின்மோட்டார்கள் – பேனல் போர்டுகள் மற்றும் உதிரிபாகங்கள் – தொகை ரூ. 9.50 L /- மன்ற அனுமதிக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது – செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 26

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் தற்போது குடிநீர் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில் அனைத்து பகுதிகளிலும், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் விநியோகக்குழாய்கள் மூலமாகவும், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்து குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக மேற்படி மின்மோட்டார்களை பழுதுநீக்கம் செய்ய, ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 864 /2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 531** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் : wd 1 to 14 –** வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகளில் – பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்களின் ஏற்படும் பழுதுகளை சீர் செய்திட, ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள செலவினம் ரூ. **5.00** L மன்றத்தின் அனுமதிக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 27

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் **15** முதல் **27** வரையுள்ள பகுதிகளில் தற்போது குடிநீர் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாத நிலையில் அனைத்து பகுதிகளிலும், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாகவும், குடிநீர் விநியோகக்குழாய்கள் மூலமாகவும், குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டிலுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்து குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக மேற்படி மின்மோட்டார்களை பழுதுநீக்கம் செய்ய , ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ. **5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 864 /2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 532** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் : wd 15 to 27 –** வரையுள்ள பகுதிகளில் – ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி கிணறுகளில் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய செலவினம் ரூ **5.00** L /– மன்றம் அனுமதி அளிப்பதோடு – பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 28

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வரையிலான வார்டுகளில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொண்டதாலும், இயற்கை இடர்பாடுகளாலும் பழுதடைந்த கீழ்க்காணும் விவரப்படியான சாலைகளை சீரமைக்கக்கோரி தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் .

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ( ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | தர்மலிங்க பிரதான சாலை தார்சாலை அமைத்தல் | 22.50 |
| 2 | 1 | டோபிகானா பிரதான சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் | 15.00 |
| 3 | 1 | கமலாநகர் 1வது தெரு, இந்திராநகர் 1வது தெரு, இந்திராநகர் 2வது தெரு மற்றும் இந்திராநகர் 3வது தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 29.70 |
| 4 | 1 | நரிக்குறவர்காலனி 1வது தெரு தார்சாலை அமைத்தல் | 8.70 |
| 5 | 1 | நரிக்குறவர்காலனி 2வது தெரு மற்றும் தர்மலிங்கம் 2வது குறுக்குதெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.70 |
| 6 | 2 | சுடுகாடு சாலை தார்சாலைஅமைத்தல் | 15.00 |
| 7 | 2 | பஜனை கோவில் மேலாண்டை தெரு தார்ச்சாலை அமைத்தல் | 7.50 |
| 8 | 2 | வேதகிரி 2வது தெரு மற்றும் வேதகிரி 3வது தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 7.60 |
| 9 | 4 | சிவன்கோயில் 1வது குறுக்கு தெரு மற்றும் சிவன்கோயில் 2வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 12.00 |
| 10 | 5 | ஜோதிராமலிங்க சுவாமிநகர் மற்றும் ஜோதிராமலிங்க சுவாமிநகர் 3வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 13.40 |
| 11 | 5 | வேணுகோபால் 6வது தெரு 1வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.70 |
| 12 | 6 | S.M.R நகர், கார்த்திகா தெரு மற்றும் ராமனுஜம் தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 10.90 |
| 13 | 6 | கவிமணி தெரு மற்றும் வள்ளலார் தெரு தார்ச்சாலை அமைத்தல் | 17.30 |
| 14 | 7 | கள்ளுகடைமேடு குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.50 |
| 15 | 10 | போலிஸ்லைன் பின்புறம் மற்றும் போலிஸ்லைன் பின்புறம் 2வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.50 |
| 16 | 12 | ஆதாம் சாகிப் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.70 |
| 17 | 14 | தண்டபானி நாடார் 1வது குறுக்கு தெரு மற்றும் தண்டபானி நாடார் 2வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.40 |
| 18 | 16 | சிவராஜ் தெரு, சிவராஜ் குறுக்கு தெரு மற்றும் இரயில்நிலையம் 1வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 11.40 |
| 19 | 16 | அண்ணா தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 8.50 |
| 20 | 17 | M.G.R நகர் மற்றும் நாராயணி அப்பார்ட்மெண்ட் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 10.70 |

| | | | |
|---|---|---|---|
| 21 | 20 | இளங்கோ தெரு சிமெண்ட்சாலைஅமைத்தல் | 4.10 |
| 22 | 22 | ஆதித்தனார் சத்திரம் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.20 |
| 23 | 24 | துர்கா நகர் , துர்கா நகர் 2வது தெரு மற்றும் துர்கா நகர் 3வது தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 17.10 |
| 24 | 24 | அன்னை அவென்யூ 1வது தெரு, 1வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 4.60 |
| 25 | 24 | கண்ணதாசன் 1 வது தெரு மற்றும் கண்ணதாசன் 2 வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 34.60 |
| 26 | 25 | என்.ஜி.ஓ நகர் வள்ளலார் ரெு, வள்ளலார் தெரு மற்றும் வள்ளலார் 1வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 15.20 |
| 27 | 25 | ஸ்ரீசாய் நகர் சிமெண்ட் சாலைஅமைத்தல் | 14.10 |
| 28 | 25 | பி.ஆர்.கே நகர் மற்றும் பி.ஆர்.கே நகர் 2வது தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 16.40 |
| 29 | 26 | பாரதி 1வது குறுக்கு தெரு தார்ச்சாலை அமைத்தல் | 4.50 |
| 30 | 26 | டி.எச் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 11.00 |
| 31 | 27 | பெரிய வேண்பாக்கம் தார்ச்சாலை அமைத்தல் | 30.00 |
| 32 | 27 | நேதாஜி நகர் பிரதான சாலை, நேதாஜி நகர் 1வது தெரு, நேதாஜி நகர் 2வது தெரு மற்றும் நேதாஜி நகர் 3வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 20.40 |
| 33 | 27 | பெருமாள் நகர் 1வது தெரு, பெருமாள் நகர் 1வது குறுக்கு தெரு மற்றும் பெருமாள் நகர் 2வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 20.80 |
| 34 | 27 | ராஜீவ்அப்பார்ட்மெண்ட் 1வது தெரு, ராஜீவ் அப்பார்ட்மெண்ட் 2வது தெரு மற்றும் சுப்பிரமணியம் நகர் தார்ச்சாலை அமைத்தல் | 18.40 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு திட்ட நிதி கோரி பணி செய்திடவும், பணிகளின் முக்கியதுவம் கருதி அவசர அவசியம் இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

( ந.க.எண்.864/2024/ இ1 )

**நகர்மன்ற தீர்மான எண்: 533** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** Wd 1-27 – வரையிலான வார்டுகளில் பாதாள சாக்கடை பணிகளில் – பழுதடைந்த 34 – பணிகளுக்கு திட்ட நிதி கோரி பணி செய்திடவும், அவசியம் கருதி – நிதிநிலைக்கேற்ப நகராட்சி நிதியிலிருந்து – மேற்கொள்ளவும் – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 29

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வரையிலான வார்டுகளில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொண்டதாலும், இயற்கை இடர்பாடுகளாலும் பழுதடைந்த கீழ்க்காணும் விவரப்படியான சாலைகளை சீரமைக்கக்கோரி தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் .

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுதொகை ( ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 4 | சிவன்கோயில் 3வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.30 |
| 2 | 4 | தலையாரி பாளையம் 1வது குறுக்கு தெரு , 2வது குறுக்கு தெரு , 3வது குறுக்கு தெரு , 4வது குறுக்கு தெரு 5வது குறுக்கு தெரு மற்றும் தீயணைப்பு நிலையம் குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.10 |
| 3 | 5 | பெரும்பேடு சாலையில் அமைந்துள்ள சுடுகாட்டிற்கு சிமெண்ட்சாலை அமைத்தல், குடிநீர் கைபம்பு பொருத்துதல் மற்றும் மேம்பாடு பணி செய்தல் | 4.10 |
| 4 | 6 | கலைஞர் தெரு , அன்பு கரங்கள் தெரு , பகத்சிங் குறுக்கு தெரு மற்றும் விவேகானந்தர் குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 12.00 |
| 5 | 6 | கள்ளுகடைமேடு பகுதி சாலை தார்சாலை அமைத்தல் | 25.70 |
| 6 | 12 | வள்ளலார் குறுக்கு தெரு மற்றும் சிவன் கோயில் 1, 2, 3, 4 , 5- வது குறுக்கு தெருக்கள் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.60 |
| 7 | 15 | பஜனை கோயில் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1.00 |
| 8 | 22 | பஞ்செட்டி சாலை அம்பேத்கர் நகர் சிமெண்ட் சாலைஅமைத்தல் | 11.10 |
| 9 | 22 | பஞ்செட்டி சாலை ஆற்றங்கரை சாலை சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.30 |
| 10 | 22 | மூகாம்பிகை நகர் முதல் குறுக்கு தெரு மற்றும் ஜிவிஎன் நகர் முதல் குறுக்கு தெரு தார்ச்சாலை அமைத்தல் | 7.90 |
| 11 | 22 | மூகாம்பிகை நகர் விரிவாக்கம் சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.10 |
| 12 | 22 | அப்துல் கலாம் நகர் 1வது தெரு தார்ச்சாலை அமைத்தல் | 13.90 |
| 13 | 22 | அப்துல்கலாம் நகர் 2வது தெரு தார்ச்சாலை அமைத்தல் | 11.80 |
| 14 | 22 | அப்துல்கலாம் நகர் 3வது தெரு தார்ச்சாலை அமைத்தல் | 9.00 |
| 15 | 22 | அப்துல்கலாம் நகர் 4வது தெரு தார்ச்சாலை அமைத்தல் | 8.50 |
| 16 | 24 | கருமாரி அம்மன் கோயில் தெரு மற்றும் அவ்வை தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.10 |
| 17 | 25 | பாலவினாயகர் கோயில் தெரு , 1வது குறுக்கு தெரு , 2வது குறுக்கு தெரு மற்றும் 3வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.90 |
| 18 | 27 | ஜெயம் நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் | 13.40 |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு திட்ட நிதி கோரி பணி செய்திடவும், பணிகளின் முக்கியதுவம் கருதி அவசர அவசியம் இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

( ந.க.எண். 864/2024/ இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 534** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** Wd 1-27 பழுதடைந்த சாலைகளை சீரமைக்க 18 பணிகளுக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது. பணிகளுக்கு திட்ட நிதி கோரவும், பணியின் அவசியம் கருதி நிதிநிலைக்கேற்ப நகராட்சி நிதியிலிருந்து – மேற்கொள்ள – மன்றம் அனுமதி வழங்குகிறது.

## <u>மேசைப்பொருள் 30</u>

பொன்னேரி நகராட்சியில் வார்டு 6 முதல் 27 வரையினை பகுதிகளில் பாதாள சாக்கடை பணி நடைபெற்று முடியும் நிலையில் உள்ளது. பணி முடிக்கப்பட்ட பகுதிகளில் பிரதான ஆள் இறங்கி கிணறு (Man Hole) – லிருந்து குடியிருப்பின் மதிற்சுவர் வரை குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மதிற்சுவற்றிலிருந்து வீட்டில் உள்ள கழிவறை வரை இணைக்கும் பணி (Internal Plumbing) 7605 வீடுகளுக்கு செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கான அரசாணை எண் ( MS)109 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள் : 16.08.2024 மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

<u>பணி பற்றிய விவரம்</u>

**(Amount in Crores)**

| S.No. | Name of the Project | Number of House Service Connections | Apraisal Project Cost | SUIDF Share (50%) | (CGF, O & M Share (50%) |
|---|---|---|---|---|---|
| 1 | UGSS Internal Plumping in Ponneri Municipality | 7605 | 5.20 | 2.60 | 2.60 |

மேற்கண்ட திட்ட மதிப்பீடு ரூ.5.20 கோடியில் 50% தொகை ரூ.2.60 கோடி மற்றும் CGF திட்டத்தில் 50% தொகை ரூ.2.60 கோடி State Urban Infrastructure Development Fund 2024-25-ல் 4 % Per Annum என்ற அடிப்படையில் 5 ஆண்டுகள் கடனாக பெற்று திட்டத்தை முடிக்கும் வகையில் அரசாணை வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திட்ட மதிப்பீடு தொகையில் 50% ரூ.2.60 கோடியினை 4 % Per Annum என்ற விகிதத்தில் 5 ஆண்டுகளுக்கு என்ற அடிப்படையில் பெற்று பணி செய்ய அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண். 511/2011/ இ1)

**நகர்மன்ற தீர்மான எண்: 535** **நாள்: 30.08.2024**

**தீர்மானம் :** Wd 6 to27 வரையிலான பகுதிகளில் பாதாள சாக்கடை பணி முடியும் நிலையில் உள்ளது. வீட்டில் உள்ள கழிவறை இணைக்கும் பணி Internal Plumbing **7605** வீடுகளுக்கு செய்யப்பட வேண்டியுள்ளதால் திட்ட மதிப்பீடு ரூ.**5.20**L /- 50% 2.60 CGF ரூ.**2.60**L /- SUIDF 2024 -2025 ல் **– 4** % Per Annum **5** ஆண்டுகளுக்கு கடனாக பெற்று திட்டத்தை முடிக்கும் வகையில் – மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>மேசைப்பொருள் 31</u>**

பொன்னேரி நகராட்சி Wd No 22ல் அமைந்துள்ள பூங்காவை KNMT திட்டத்தின் கீழ் மேம்படுத்த ஒப்பந்தபுள்ளி கோரி பணிகள் செய்யப்பட்டன. ஆனால் செய்யப்பட்ட பூங்கா மேம்பாட்டு பணி, பூங்காவில் மொத்த பராமரிப்பையும் உள்ளடக்கியதாக அமையாமல் ஒரு பகுதி மட்டுமே பணி நிறைவடைந்துள்ளது. விடுபட்டுள்ள பூங்காவின் பிற பகுதிகளையும் உரிய விளையாட்டு உபகரணங்கள், நடைபாதை ஆகியவற்றுடன் நிறைவு செய்து தருமாறு அந்த வார்டு உறுப்பினர் திரு.பா.சுரேஷ் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க, உரிய மதிப்பீடு செய்து ஒப்பந்தபுள்ளி கோர நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்கிறேன்.

மன்றம் பார்வையிட்டு, அனுமதி வழங்க வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண்: 536** **நாள்: 30.08.2024**

தீர்மானம் : மேசைப்பொருள் **31–**ல் திரு. பா.சுரேஷ் மன்ற உறுப்பினர் அவர்களின் **–** வேண்டுகோளான KNMT - திட்டத்தின் கீழ் – மேற்கொள்ளப்பட அப்துல்கலாம் பூங்காவின் நிறைவு பெறாத பணிகளை முடித்து தருமாறு – கோரிக்கயை மன்றம் ஏற்றுக்கொண்டு மதிப்பீடு செய்து – தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.